செ.வெ.எண்: 289/2016 நாள்: 21.05.2016

**பத்திரிகைச் செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 19.5.2016 அன்று இரவு பெய்த கன மழையின் காரணமாக கல்குளம் வட்டம் குளச்சல் பகுதிக்குட்பட்ட பாம்பூரணி வாய்க்காலில் நீர் வரத்து அதிகமாக இருந்ததின் காரணமாக அதன் கரைகளில் மறுகால் ஏற்பட்டு களிமார், இரும்பெலி மற்றும் லியோன் நகர் பகுதிகளில் உள்ள வீடுகளை சுற்றி வெள்ளம் சூழ்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஸ்தல ஆய்வு மேற்கோண்டு உத்தரவிட்டதின் பேரில், பொதுப்பணித் துறை, உள்ளாட்சித்துறை மற்றும் காவல் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. அத்துடன் பாம்பூரணி வாய்க்காலில் நில அளவை மேற்கொண்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, மழை நீர் செல்வதற்கு வேண்டிய பாதை சீர் செய்யப்பட்டது. இதனால் தேங்கியிருந்த மழைநீர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக, பொதுமக்கள் அன்றாட செயல்பாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பியது. அதனைப் போன்று, சைமன் காலனி மற்றும் கோடிமுனை ஆகியப் பகுதிகளில் தேங்கிய மழை நீர் உடனடியாக வெளியேற்றப்பட்டது.

அகஸ்தீஸ்வரம் வட்டம் நீண்டகரை ஏ கிராமத்தில் செல்லும் ஆலங்கால் ஒடை மற்றும் சின்ன ஒடை ஆகியவற்றின் கரை ஒரங்களில் உடைப்பு ஏற்பட்டு, பிள்ளைத்தோப்பு பகுதியைச் சார்ந்த கே.எஸ்.எஸ்.நகர், வின்செனட் நகர், அழிக்கால் பகுதியில் உள்ள வீடுகளுக்குள்ளும், பாதைகளிலும் சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு நீர் காணப்பட்டது. மேலும், ஓடையிலிருந்து கடலுக்குச் செல்லும் பொழிமுகம் அடைபட்டிருந்தது. மேற்கண்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கோண்டு, உத்தரவிட்டதின் பேரில், ஜேசிபி மூலம் அடைப்பு நீக்கப்பட்டு, நீர் கடலில் நேரடியாக செல்வதற்கான வழி ஏற்படுத்தப்பட்டது. குடியிருப்புப் பகுதிக்குள் நிரம்பியிருந்த நீரினை வெளியேற்ற கணபதிபுரம் பேரூராட்சி மூலம் 3 மின் மோட்டார்கள் அமைத்து, மழை நீர் வெளியேற்றப்பட்டது, மற்றும் ஓடையின் கரைப் பகுதியினை பலப்படுத்தும் விதமாக, மணல் மூடைகள் பொதுப்பணித்துறை, உள்ளாட்சித் துறை மற்றும் வருவாய்த் துறை மூலம் அடுக்கப்பட்டதின் காரணமாக பொதுமக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்.

மாவட்ட ஆட்சியர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.